23 செப்டம்பர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 25ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

## கிறிஸ்துவில் மற்றவர்களை மதிப்பது, உலகத்தோடு நட்புறவாடல்

# நம் மத்தியில் இருக்கும் அந்நியக் குடியேறிகளை ஆதரி

பெரியவனாக இருக்க விரும்பினால், மற்றவர்க்குப் பணியாற்ற வேண்டுமென இயேசு தெளிவுப்படுத்தியுள்ளளார். "ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்"(மாற்கு 9:35). தொடர்ந்து மாற்கு 9:36-37, சிறியவர்கள், சிறுப்பிள்ளைகள் மீது இயேசு தனிப்பாசம் காட்டுவதைப் படிக்கிறோம். ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அவர்கள் நடுவே நிறுத்தி, இயேசு கூறியது, "அதை அரவணைத்துக் கொண்டு, இத்தகைய சிறுபிள்ளைகளுள் ஒன்றை என் பெயரால் ஏற்றுக் கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக் கொள்பவர் என்னை மட்டும் அல்ல, என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறார்". கிறிஸ்துவின் சீடர்கள் என்றால், ஏழைகள் மீதான இந்த தனிப்பாசம் மற்றும் அன்பினால் மிகுந்த மகிழ்ச்சியோடும் பெருந்தன்மையோடும் பணியாற்ற வேண்டுமல்லவா? பரிவிரக்கத்தோடு நற்செயல் ஆற்றும் போது, பாகுபாடோடும் நேர்மையற்ற எண்ணத்தோடும் எவ்வாறு பணியாற்ற முடியும்? (யாக்.3:17)



Image: ©123rf.com

உள்ளத்தை உறுத்தும் என்பதால் துன்பத்தைக் காண சிலர் விரும்புவதில்லை.
- பேராயர் ஃபுல்டன் ஷீன்

அன்பார்ந்த சகோதர-சகோதரிகளே, நம் மத்தியில் வாழும் அந்நியக் குடியேற்றக்காரர்களை ஆதரிப்பது என்றால், மனிதர் என்ற எல்லா அகதிகளும் அந்நியக் குடியேற்றக்காரர்களும் தங்களது ஆற்றலின் முழு பயனை அடைவதற்கான எல்லா முயற்சியையும் மேற்கொள்வது. பொருளியல், உடல், மனம் ஆன்மா என்ற எல்லா நிலையிலும் வளம் பெறுவதற்கு பரஸ்பர ஈடுபாட்டோடு நாம் பணியாற்றிட வேண்டும். அவர்களும் நம்மைப் போல் உள்ளவர், அவர்களுக்கும் நம்மைப் போல் ஆசைகளும் கனவுகளும் உண்டு. நலமான, மகிழ்ச்சியான, வளமான வாழ்க்கை தங்களுக்கு மட்டுமின்றி தங்களது குடும்பத்தாருக்கும் கிடைக்க வேண்டும் என்பது அவர்களது ஆசை. வாழும் சமூகத்திலும் குடுப்பத்திலும் ஆரோக்கியமான சூழ்நிலையை நிலவ அவர்கள் வேண்டுகின்றனர்.

எனவே, அக்கறையற்றத்தன்மையையும் கலாச்சார வேறுபாட்டையும் ஒதுக்கி வைக்கும் தருணம் வந்து விட்டது. அந்நியக் குடியேற்றக்காரர்களின் சுமையை அறிந்து அவர்களை தமது குடும்பங்களில், சுற்றுவட்டாரத்தில், அகிச-வில், பங்கில் ஆதரிப்போம். நாம் அந்நிய நாட்டிற்குச் சென்றால் எப்படி நடத்தப்பட வேண்டுமென விரும்புகிறோமோ அவ்வாறே அவர்களையும் நடத்துவோம். அகதிகள், குடியேற்றக்காரர்கள், நாடற்றவர்களின் பிள்ளைகளுக்கான பள்ளிக்கூடங்களில் தொண்டூழியம் செய்யலாம். நமது பங்கில் செயல்படும், ஒருங்கிணைந்த மனித வளர்ச்சி பணிக்குழுக்களில் சேர்ந்து பணியாற்றலாம். அல்லது அரசு சாரா இயக்கங்களில் இணைந்து பங்காற்றலாம். அந்நியக் குடியேற்றக்காரர்களின் தனிப்பட்ட உரிமைகள் பற்றி எடுத்துரைக்கலாம். எல்லா சமயத்திலும் அவர்களின் உரிமை காக்கப்பட பாடுபடலாம்.

கொடுத்துப் பார், பெறுவது அமிர்தமாக இருக்கும். ✝

வாரம் ஒரு வசனம்

பரஸ்பர ஈடுபாட்டோடு நாம் பணியாற்றிட வேண்டும்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 38/2018

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

Print: Stenoprint Sdn Bhd
Design: The Mustard Seed Studio

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 செப்டெம்பர் (புரட்டாசி) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவில் எல்லோருக்கும் மதிப்பளித்து உலகத்தோடு நட்புறவு கொள்ளுவோம்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்**: பொதுக்காலம் 25ஆம் ஞயிறு — சனி 22-09-2018 - ஞாயிறு 30-09-2018

சா.ஞா: 2: 12a, 17-20 தி.பா: 53: 3-4, 5, 6, 8 யாக்கோபு: 3: 16- 4: 3 மாற்கு: 9: 30-37

**" என் தலைவர் என் வாழ்வுக்கு ஆதரவாய் உள்ளோருடன் இருக்கின்றார்" - திபா 53**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 22 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித கிளாரா) | **விவிலியக் கல்வி (Bible Knowledge)** : மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை<br>**மூன் கேக் விழா ( இலையுதிர் கால திருவிழா) மாலை 7.00 மணி** |
| ஞாயிறு | 23 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (புனித ஜஸ்ரின்)<br>திருப்பலி (ஆ) (மறை. கல்வி குழு)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பல (தேமொழி)<br>மாலை 6.00 கம் செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |
| திங்கள் | 24 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 25 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 26 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 8.00 மணிக்கு அ.தி.ச ஒருங்கிணைப்புக் குழு ஒன்று கூடல் (BECCOT)*** |
| வியா | 27 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 28 | 6.45 கா | திருப்பலி | |

**பொதுக்காலம் 26ஆம் ஞயிறு**

எண்: 11: 25 - 29 தி.பா: 18: 8, 10, 12 - 13, 14 யாக்கோபு: 5: 1 - 6 மாற்கு: 9: 38 எ 43, 47 - 48

**" ஆண்டவரின் நியமங்கள் சரியானவை, இதயத்தை மகிழ்விக்கின்றன" - திபா 18**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 29 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(வின்செண்ட் டி போல்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge)** : மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 30 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (குடியேற்றவாசிகள்)<br>திருப்பலி (ஆ) (புனித பேணர்ட்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பல (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2018 செப்டம்பர் (புரட்டாசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

**i) ஆலய காணிக்கை**
15/16 செப்டம்பர் ரிம: 8,372.45

**அனைத்து தாராள உள்ளங்களையும் இறைவன் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!**

**ii) ஏழைகளின் சிறிய சகோதரிகளின் நிதி திரட்டு** தங்களுடைய முதியோர் இல்லத்திற்கு நிதி திரட்ட செப்டம்பர் 22/23 தேதிகளில் நம் பங்கிற்கு வருகை தருகிறார்கள். நம்முடைய ஆதரவை அவர்களுக்கு வழங்குவோம்.

**அனைத்து தாராள உள்ளங்களையும் இறைவன் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!**

**iii) ஒற்றுமை நடையில் கலந்து கொண்ட அனைவருக்கும் உதவி செய்த அனைவருக்கும் நம்முடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

- ➢ **மூன் கேக் விழா ( இலையுதிர் கால திருவிழா)** 22/09/18 (சனி) மாலை 7.00 மணிக்கு மினவுதல் தேவாலய மண்டத்தில் நடைபெறும் நிகழ்வில் உங்கள் குடும்பத்தினர் நண்பர்களோடு கலந்து கொள்ள அழைக்கிறோம்.
- ➢ **திருமணம் புரிய இருப்போரின் கவனத்திற்கு**: படிவத்தில் உங்களுடைய விவரங்களை முதலில் பதிவு செய்தபின் பங்கு குருவானவரைச் சந்தியுங்கள். (குறைந்தது ஒரு ஆண்டுக்கு முன்னர்) கடைசி நேர திட்டமிடலை தவிருங்கள்.
- ➢ **ஆலயத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருக்க உதவுங்கள்:** சுவர்களில் ஆணி அடிப்பது, பசை விளம்பரங்கள் ஒட்டுவது ஆகியவை அனுமதிக்கப்படாது. இறைவன் வாழும் இல்லமாகிய ஆலயத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டியது நம் அனைவரின் கடமை,
- ➢ **திருப்பலிக்கு முறையான உடையணிதல்** : பங்கு மக்கள் பொறுப்பாளர்கள், திருப்பலியில் பணி செய்பவர்கள் அனைவரும் நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு வரும்பொழுது முறையாகவும் பொருத்தமாகவும் உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்

இன்று திருப்பலியை வழிநடத்திய அதிச புனித ஜஸ்ரின் (சிறம்பான் ஜயா) மற்றும் மறைக்கள்வி ஆசிரியர்களுக்கு நமது

➢ **குடியேற்றவாசிகளின் ஞாயிறு: 30-09-2018** பகல் 1.00 மணிக்கு திருப்பலி அதன்பின் ஒன்றுகூடல்
- 24 மணி நேர நற்கருணை ஆராதனை: மினவுதல் தேவாலய பார்லரில் நடைபெறும். - 29-09-2018 (சனி) பகல் 3.00 முதல் 30-09-2018 (ஞாயிறு) பகல் 3.00 வரை
- ஒரு குடியேற்ற சகோதர சகோதரியையாவது சந்தித்து அறிமுகப்படுத்திகொள்ளுங்கள்.
- அவர்களின் பெயரை நினைவில் வைத்து அவருக்காக செபியுங்கள்.
- பகல் 1.00 மணிக்கு திருப்பலியில் கலந்துகொள்ளுங்கள்
- திருப்பலிக்குப் பின் நடைபெறும் விருந்துபசரிப்பில் கலந்துகொள்ளுங்கள்.

➢ **ஏழைகளுக்கான பணிக்குழு** (ஏழைகளின் திருச்சபை ஏழைகளுக்கானது- திருத்தந்தை பிரான்சிஸ்)
- 22/23 செப்டம்பர் பணிக்குழுவை நியமித்து அதனுடைய குழு உறுப்பினர்களை ஆசீர்வதித்தல்
- மருத்துவ முகாம் 14-10-2018
- ஆன்மீக உரை - "ஏழைகளின் திருச்சபை" வழங்குபவர்: அருள்பணியாளர் சேவியர் - 03-11-2018 (பங்கு மக்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம்)
- உலக ஏழைகளின் நாள்: 18-11-2018
- கூடுதல் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள : ஸ்டீபன் டயோனிஸ் அப்பு (016-611 0681)

➢ **செராஸ் புனித பிரான்சிஸ் அசிசியாரின் புதிய ஆலய அர்ப்பணிப்பு மற்றும் திருவிழா** 04-10-2018 (வியாழன்) மாலை 7.00 மணி மற்றும் அருள்பணியாளர்: போல் சியாங் கப்பூச்சியன் அவர்களின் குருத்துவ வெள்ளி விழா (25 ஆண்டு) கொண்டாட்டம். பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடர்புக்கு டோரீன் 017-3326 007

➢ **170 ஆம் நிறைவு விழா - "கார்னர் ஸ்டோன் காஃபி டேபிள் புத்தகம்** - ரிம 40.00 திருப்பலிக்குப் பின்னர் ஆலய வளாகத்திலும், பங்கு அலுவகலத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

➢ **தமிழ்பேசும் இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி "என்னுடைய சீடர்களாக திகழுங்கள்"** 28 – 30 செப்டெம்பர் NUBE Training Centre Port Dickson (போர்ட் டிக்சன்) எனும் இடத்தில் நடைபெறவுள்ளது 17 – 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் இதில் கலந்து கொள்ளலாம். கட்டணம் ஒருவருக்கு ரி.ம 50.00 தொடர்புக்கு : போல் ராஜ் : 014 639 5608

➢ **வீட்டில் உள்ள நோயாளிகளுக்கு நற்கருணை வழங்குதல்**
- அனைத்து நற்கருணைப் பணியாளர்களும் தங்கள் அதிச /வட்டாரங்களில் உள்ள நோயாளிகளுக்கு நற்கருணை வழங்குவதை உறுதிசெய்து கொள்ளுதல் - விவரங்கள் அடிக்கடி புதுப்பிக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு வாரமும் நற்கருணை வழங்குதல்
- அதிச/குடும்பங்கள் தங்களிடையே வீட்டில் /மருத்துவ மணையில் உள்ள நோயாளிகளின் விவரங்களை பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். கூடுமென்றால் அறுவை சிகிச்சைக்குமுன் குருவானவரைச் சந்திக்கவும்

➢ **சோய்ஸ் - ஆங்கிலம் (கோலாலம்பூர்) 05-10-2018 - 06-10-2018** (வெள்ளி -ஞாயிறு)
choiceklrecruitment@gmail.com

➢ **குருக்களின் ஆண்டுத் தியானம்:** அருள்பணியாளர்: சேவியர் அண்ட்ரூ - 23-28 செப்டம்பர் 2018 (கேமரன் மலை)

➢ **பங்கு மேய்ப்புப்பணி பேரவை ( PPA )** 21-10-2018 (ஞாயிறு) பகல் 2.00 மணி : மினவுதல் தேவாலய மண்டபம்